பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

26 11 2025 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய அரசின் உடான் திட்டம் உள்ளூர் பொருளாதாரம் மற்றும் சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. ஹைதராபாத் விண்வெளி தொழிற்பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள விமான எஞ்சின் பராமரிப்பு நிறுவனத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, காணொலி வாயிலாக இன்று திறந்து வைக்கிறார்.

3. அரசியல் சாசனம் நாட்டின் ஆன்மாவாக திகழ்கிறது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா கூறியுள்ளார்.

4. மும்பை தீவிரவாத தாக்குதல் சம்பவத்தின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

5. பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் திரு. முகமது யூனுஸ் பதவி விலக வேண்டும் என்று அவாமி லீக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மத்திய அரசின் உடான் திட்டம் உள்ளூர் பொருளாதாரம் மற்றும் சுற்றுலா வளர்ச்சியை ஊக்குவிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

விமானப் போக்குவரத்து துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு புதுதில்லியில் நேற்று குடியரசு துணைத்தலைவரை சந்தித்து தமது துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.

அப்போது பேசிய குடியரசு துணைத்தலைவர், உடான் திட்டம் உள்ளூர் மக்களுக்கு பெரிதும் பயன்படுவதாக கூறினார்.

இத்திட்டம் நாட்டில் பயன்பாடின்றி உள்ள விமான நிலையங்களுக்கு புத்துயிரூட்டுவதாக உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதிகரித்து வரும் விமானிகளின் தேவையை பூர்த்தி செய்யும் விதமாக பயிற்சி விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்றும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

ஹைதராபாதில் உள்ள விண்வெளி தொழிற்பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள விமான எஞ்சின் பராமரிப்பு நிறுவனத்தை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, காணொலி வாயிலாக இன்று திறந்து வைக்கிறார்.

இந்த நிறுவனத்தில், விமான எஞ்சின்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக, பிரதமர் அலுவலக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், விமான எஞ்சின்களைத் தயாரிக்கும் நிறுவனமே, இந்தியாவில் முதன் முறையாக, தனது பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பிரிவை அமைக்க இருப்பதாகவும், இது, விமானத் தயாரிப்பு தொழில் துறையில், சுயசார்புக்கு வழிவகுக்கும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய நிறுவனம் உள்நாட்டிலேயே அமைக்கப்படுவதன் காரணமாக, அன்னியச் செலாவணி சேமிக்கப்படுவதுடன், வேலைவாய்ப்புகளும் உருவாவதுடன், இந்தியா, விமானத் தொழில் துறையில், இந்தியா உலகளாவிய மையமாக உருவெடுக்கும் என்றும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

அரசியல் சாசனம் என்பது ஆவணமாக அல்லாமல், இந்தியாவின் ஆன்மாவாக திகழ்கிறது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லா கூறியுள்ளார்.

ஜெய்ப்பூரில் தனியார் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அரசியல் சாசன தின கொண்டாட்டத்தில் பேசிய அவர், அரசியல் சாசனத்தில் இடம்பெற்றுள்ள

அம்சங்களைப் புரிந்துகொண்டு அதனை மதித்து நிலைநாட்டுவது நாட்டு மக்களின் கடமை என்று வலியுறுத்தினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க இதுபோன்ற கொண்டாட்டங்கள் அவசியம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு இளைஞர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும் என்றும் திரு. ஓம் பிர்லா கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

மும்பை தீவிரவாத தாக்குதல் சம்பவத்தின் 17ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

கடந்த 2008ஆம் ஆண்டு இதே நாளில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் மும்பையில் நடத்திய தாக்குதலில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட 170க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 300க்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

இந்த கொடூர சம்பவத்தை நினைவுகூறும் வகையில் தேசிய பாதுகாப்புப் படை சார்பில் மும்பையில் உள்ள Gate Way of India பகுதியில் சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மும்பையில் உள்ள பள்ளி, கல்லூரி மாணவர்கள் இதில் பங்கேற்று தீவிரவாதத்திற்கு எதிராக உறுதிமொழி ஏற்க உள்ளனர்.

<<<<>>>>

சத்தீஸ்கர் மாநிலத்தில் 28 நக்சலைட்டுகள் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்துள்ளனர்.

சத்தீஸ்கர் மாநில அரசு, மத்திய அரசு மற்றும் பாதுகாப்பு படையினருடன் இணைந்து செயல்படுத்தி வரும் Puna Margem திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் பலனாக பஸ்தார் பகுதியைச் சேர்ந்த இந்த நக்சலைட்கள் சரணடைந்துள்ளனர்.

இவர்களில் 19 பேர் பெண்கள் என்றும், இவர்களை பற்றி தகவல் அளிப்போருக்கு 89 லட்சம் ரூபாய் சன்மானம் அறிவிக்கப்பட்டிருந்ததாக நாராயண்பூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ராபின்சன் குடியா தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இம்மாவட்டத்தில் மட்டும் இதுவரை 287 நக்சலைட்டுகள் சரணடைந்திருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

மிசோரம் மாநிலத்தின் Lungei பகுதியைச் சேர்ந்த மாணவர்கள், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்துப் பேசியுள்ளனர்.

தேசிய ஒருமைப்பாட்டுப் பயணத்தின் ஒரு பகுதியாக, இந்த மாணவர்கள், புதுதில்லியில் உள்ள குடியரசுத் தலைவர் மாளிகையைப் பார்வையிட்டனர்.

<<<<>>>>

இனி, சர்வதேச திரைப்பட விழா குறித்த செய்திகள்.

(Sound Byte - Opening Tune - 8 Sec.)

கோவா-வின் பனாஜி-யில் நடைபெற்று வரும் 56-வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் நேற்று, “The New AI Cinema” என்ற தலைப்பில், திரைப்பட தயாரிப்பில், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப பயன்பாடு குறித்து விவாதிக்கப்பட்டது.

திரைப்படத் தயாரிப்பாள ஷேகர் கபூர் தலைமையில் நடைபெற்ற இந்த விவாத நிகழ்ச்சியில், ஷங்கர் ராமகிருஷ்ணன், வி.முரளிதரன் உள்ளிட்ட தொழில்நுட்ப வல்லுனர்கள் பங்கேற்று, தற்போதைய நவீன உலகில், திரைப்படத் துறையில் செயற்கை நுண்ணறிவு குறித்து எடுத்துரைத்தனர்.

குறிப்பாக, Mr.India-2 திரைப்படத்திற்கான, திரைக்கதை வசன தயாரிப்பில், ChatGPT எந்தளவிற்கு உதவிகரமாக இருந்தது என்பதை, திரு. ஷேகர் கபூர் விளக்கிக் கூறினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட The Lost Legends எனும் குறும்படமும் திரையிடப்பட்டது.

நேற்றைய ஆறாம் நாள் விழாவின் சிறப்பம்சமாக திரையிடப்பட்ட, ‘My Father's Shadow’ எனும் நைஜீரிய திரைப்படம், பார்வையாளர்களின் வரவேற்பைப் பெற்றது.

இந்த திரைப்படம், தலைசிறந்த திரைப்படத்திற்கான தங்கமயில் விருதுக்கான போட்டியிலும் உள்ளது.

(Sound Byte - Closing Tune - 8 Sec.)

<<<<>>>>

பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்கக் கடலோர நாடுகளின் அமைப்பான BIMSTEC-ன், கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பு குறித்த 4-வது கூட்டம், புதுதில்லியில் நடைபெற்றது.

கடற்படை துணைத் தலைமைத் தளபதி வைஸ் அட்மிரல் பிஸ்வஜித் தாஸ்குப்தா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், ஆக்கப்பூர்வ விவாதங்கள் நடத்தப்பட்டு,

கடல்சார் பாதுகாப்பு சார்ந்த ஐந்து அம்சங்களில் சிறப்புக் கவனம் செலுத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வங்கக் கடலோர நாடுகள் எதிர்கொள்ளும், கடல்சார் பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு, ஒருங்கிணைந்த அணுகுமுறை மூலம் தீர்வுகாண்பது குறித்தும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதாக, தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் அரசால் செயல்படுத்தப்படும் மக்கள் நலத் திட்டங்களை, குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றி முடிக்குமாறு, முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வருவாய்த்துறையால் செயல்படுத்தப்படும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து ஜம்முவில், நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் பேசிய அவர், சமூக நலத் திட்டங்களுக்கான பணப் பட்டுவாடாவை, தாமதமின்றி மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

திட்டப் பணிகளை நிறைவேற்றுவதில் உள்ள தடைகளை அகற்ற, சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், அவற்றை விரைந்து முடிக்குமாறும் திரு.உமர் அப்துல்லா, அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

<<<<>>>>

மத்திய அரசின் புதிய தொழிலாளர் சட்டங்கள், அமைப்புசாரா தொழிலாளர்களை முறைப்படுத்த, அவர்களுக்கு சமூக நலத் திட்டங்களின் பலன் கிடைப்பதை உறுதி செய்வதாக உள்ளது என்று இந்திய ஏற்றுமதியாளர் சங்கங்களின் கூட்டமைப்புத் தலைவர் திரு.அஜய் சஹாய் கூறியுள்ளார்.

இந்த சட்டங்கள், பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கையை உயர்த்த வகை செய்யும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக, இரவுப் பணியில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு, பணியிடங்களில் பாதுகாப்பு அளிப்பதாக உள்ளதோடு, உற்பத்தியை அதிகரிக்க உதவும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் திரு. முகமது யூனுஸ் பதவி விலக வேண்டும் என்று அவாமி லீக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக நாடு தழுவிய போராட்டம் நடத்தப்போவதாகவும் அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமர் திருமதி ஷேக் ஹசீனா உள்ளிட்டோருக்கு எதிரான சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் அளித்துள்ள தீர்ப்பு, சட்ட விரோதமானது என்றும் அவாமி லீக் கட்சி கூறியுள்ளது.

<<<<>>>>

நேபாள நாடாளுமன்றத் தேர்தலுக்கான ஆயத்தப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அடுத்த ஆண்டு மார்ச் 5ஆம் தேதி நடைபெறவுள்ள இந்த தேர்தலுக்கான செலவினமாக, அந்நாட்டு நிதியமைச்சகம், தேர்தல் ஆணையத்திற்கு 500 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.

வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணிகள், இம்மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, வாக்காளர் இறுதிப் பட்டியல் அடுத்த மாதம் 30-ந் தேதி வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

வெனிசுலா நாட்டைச் சேர்ந்த Cartel de los Soles அமைப்பை, வெளிநாட்டுத் தீவிரவாத அமைப்பாக, அமெரிக்கா அறிவித்துள்ளது.

வெனிசுலா அதிபர் நிகோலஸ் மதுரோ-வுக்கு நெருக்கமான இந்த அமைப்பு, போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபடுவதாகக் கூறி, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக, அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள வெணிசுலா அரசு, செயல்பாட்டில் இல்லாத ஒரு குழு மீது, தடை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இருப்பது, வினோதமானது என்று கூறியுள்ளது.

<<<<>>>>

கோவாவின் பனாஜியில் நடைபெற்று வரும் விஸ்வநாதன் ஆனந்த் கோப்பை செஸ் இறுதிப் போட்டியில் சீனாவின் Wei Yi மற்றும் உஸ்பெகிஸ்தானின் Javokhir Sindarov இடையிலான இரண்டாவது சுற்று ஆட்டம் டிராவில் முடிவடைந்தது.

<<<<The End>>>>